**செய்தி வெளியீடு எண்: 687** **நாள்: 25.09.2018**

# செய்தி வெளியீடு

**தமிழ்நாடு அரசு**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

## தொழிற்பயிற்சி நிலையங்களில் (ITI) மாணவர்கள் நேரடி சேர்க்கை அறிவிப்பு

2018–ஆம் ஆண்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மாவட்ட கலந்தாய்வு மூலம் நடைபெறும் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் 28.05.2018 முதல் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலம் வரவேற்கப்பட்டு 04.07.2018 முதல் 22.09.2018 முடிய மூன்று கட்டங்களாக மாணவர்கள் சேர்க்கை செய்யப்பட்டனர்.

தற்போது அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் காலியாகவுள்ள இடங்களுக்கு 24.09.2018 முதல் 28.09.2018 முடிய நேரடி சேர்க்கை நடைபெற்று வருகிறது.

முதலில் வருபவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். மாணவர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி அருகிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்களை தொடர்பு கொண்டு பயிற்சியில் சேருமாறு தெரிவிக்கப்படுகிறது.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் பயிற்சியளிக்கப்படும் தொழிற்பிரிவு விபரங்களை www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துகொள்ளலாம் அல்லது தங்களுக்கு அருகில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைத் தொடர்பு கொண்டு விவரம் பெறலாம்.

தொலைபேசி எண் : **044–22501006**
Email ID : detctsection@gmail.com

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**